**IN THE COURT OF THE V ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, MADURAI**

**OS. NO.148/2021**

P.W.1 திரு. ராஜா

நாள். 27.07.2026

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

1. தாவா சொத்தின் முந்தைய ஆவணங்களை நான் பார்வையிட்டேனா என்றால் அவர்கள் எனக்கு கொடுக்கவில்லை. கிரைய ஒப்பந்தம் செய்வதற்கு முன்பு தாவா சொத்தை அளந்து பார்த்தேனா என்றால் அளந்து பார்க்கவில்லை. நான் குடியிருப்பது என் சொந்த வீடு என்று சொன்னால் சரிதான் நான் வேறு வீடுகளை வாடகைக்கு விட்டு வாடகை வாங்கி வருகிறேன் என்று சொன்னால் சரிதான். கிரைய ஒப்பந்தம் செய்வதற்கு முன்பு சொத்தின் வழிகாட்டி மதிப்பை பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை. தாவா சொத்திற்கு மதிப்பு ரூ.3 இலட்சம் என்று எவ்வாறு முடிவு செய்யப்பட்டது என்றால் பிரதிவாதிகள் சொல்லி முடிவு செய்யப்பட்டது.

2. கிரைய ஒப்பந்தம் ஏற்பட்ட பிறகு தாவா சொத்தில் கட்டுமானங்கள் ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல.கிரைய ஒப்பந்தம் ஏற்பட்ட பிறகு பிரதிவாதி வீடு கட்டுவதற்கு பணம் தேவைப்படுவதாகவும் அதற்கு கடன் கேட்டாரா என்றால் இல்லை.இந்த கிரைய ஒப்பந்தம் ஏற்படுவதற்கு முன்பு இரண்டு முறை பிரதிவாதி கடன் வாங்கி திருப்பி செலுத்தியதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான், ஆவணங்களை கடனை திருப்பி செலுத்திய பிறகு பிரதிவாதியிடமே கொடுத்து விட்டேன். அந்த ஆவணத்தின் நகல் உள்ளதா என்றால் இல்லை. கிரையம் முதலில் ஏற்பட்ட தேதியில் ரூ.2 இலட்சம் ரொக்கமாக கொடுத்தேனா என்றால் ரொக்கமாக கொடுத்தேன்.

3. 2019 ஆம் ஆண்டு ஏற்பட்ட மறுகிரைய ஒப்பந்தத்தின் போதும் ரூ.5 இலட்சம் ரொக்கமாக தான் கொடுத்தேன். பொதுவாக பணம் தேவைப்பட்டால் வங்கியிலிருந்து தான் எடுத்து வருவேன் என்றால் இருக்கலாம். பிரதிவாதிக்கு பணம் கொடுக்கும் பொழுது வங்கியிலிருந்து தான் எடுத்துக் கொடுத்தேன் என்றால் தற்பொழுது ஞாபகம் இல்லை. முதலில் ஏற்பட்ட கிரைய ஒப்பந்தத்தில் காலக்கெடு 4 மாதங்கள் என்று உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தை கிரையம் செய்து கொடுக்கும் நோக்கத்தில் பிரதிவாதி கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொடுக்கவில்லை என்றும், அவை பிரதிவாதி வாங்கிய ரூ.2 இலட்ச ரூபாய் கடனுக்காக எழுதி கொடுக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. இரண்டாவதாக ஏற்படுத்தப்பட்ட கிரைய ஒப்பந்தம் பிரதிவாதியிடம் வெற்றுத் தாளில் கையொப்பம் வாங்கி நானே பூர்த்தி செய்து தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் ரூ.2 இலட்சத்தை தவிர பிரதிவாதிக்கு எந்த பணமும் கொடுக்கவில்லை என்றும், வங்கி கணக்கைப் பார்த்தால் அது தெரியவரும் என்று சொன்னால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒப்பம்/K.தாமோதரன்
5வது கூடுதல் மாவட்ட நீதிபதி
மதுரை.